OPEN ACCESS

Volume: 4

Issue: 4

Month: April

Year: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 27.2.2020

Accepted: 13.3.2020

Published: 01.04.2020

Citation:
Murugesapandian, N. (2020). Thirukkural and Manu Dharma Shastra. *Shanlax International Journals of Tamil Research*, *4*(4), 1–10.

DOI:
https://doi.org/10.34293/tamil.v4i4.3276

*Corresponding Author:
murugesapandian2011@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Thirukkural and Manu Dharma Shastra

**N. Murugesapandian**
http://orcid.org/0000-0002-1831-7730

**Abstract** - In Tamil Nadu, during the Sangam era, Vedic religion and other religions, namely, Jainism and Buddhism, were ideologically introduced. During that period, the social environment of the ethnic group was disintegrating, and the political spread of the Muventhar with the marginal kings was dominant. The land, symbolized by the Tamil language, is expanding and relating to politics. Rules and punishments created in the name of ethics were emphasized in the context of producing bodies that were pro-power. In the ethical texts, Thirukkural and Manu Dharma Shastra are important.The idea that lies in the aftermath of the Thirukkural rules that are celebrated as ethics is to be found. At the same time, the practice of Manu dharma, up and downs in the name of the birth, the inequality of the woman on the basis of gender. In Vedic religion the politics that have kept Bhramins at the top of the social stratum remain early to the present day.As far as Thiruvalluvar is concerned with the development of human beings, Manu has given rise to the social dominance of Varunasirama on the basis of birth.The essence of the article is the attempt to contain the political power that operates in the back of two different ethical literatures.

**Key Words:** Tamil ethical literature, Thirukkural, Thiruvalluvar, Manu dharma shastra, Caste persecution, Gender inequality, Agama rules, Vedic religion, Crime and Punishment, Varunasirammam

**References**

1 Puliyurkeseigan. (2014). *Thirukkural*. Parimelazahr Commentary, Chennai, Pumpugar Pirasuram.
2 Thirulookasiitharam, (Tr.) (1999). *Manu Dharma Sasthram*. Chennai, A.K. Gopalan Publication.
3 Murugarathinam, T. (2004). *Varunasirama DharamamumVaimozhiValluvamum*. Madurai, ThamilzhChoolai.
4 Subramanian. N. (1989). *The Bhramins in the Tamil Country*. Madurai, Ennes Publictions.
5 Ramanuja Thathachariyar. (2006). *Indhu Matham Enge Pogirathu*. Chennai, Nakkheeran Publications.
6 Rajgauthaman. (2008). *Thzamil samukaththil aramaum aaralum*. Coimbatore, Vidiyal Publications.

# திருக்குறளும் மநு தரும சாஸ்திரமும்

*ந. முருகேசபாண்டியன்*

***ஆய்வுச்சுருக்கம்*** *– தமிழகத்தைப் பொருத்தவரையில் சங்ககாலத்திலே வைதிக சமயமும், அவைதிக சமயங்களான ஜைனமும், பௌத்தமும் கருத்தியல்ரீதியில் மெல்ல அறிமுகமாகிவிட்டன. அன்றைய கால கட்டத்தில் இனக்குழுச் சமூக வாழ்க்கைச் சூழல் சிதைவடைந்து, குறுநில மன்னர்களுடன் மூவேந்தர்கள் ஆதிக்கம் செலுத்துகிற அரசியல் பரவலானது. தமிழ்மொழியினால் அடையாளப்படுத்தப்படுகிற நிலவெளியானது விரிவடைந்து, அரசியலுடன் தொடர்புடையதாக மாறியது. அரசியல் அதிகாரத் திற்குச் சார்பான உடல்களைத் தயாரிக்க வேண்டிய சூழலில் அறம் என்ற பெயரில் புதிதாக உருவாக்கப்பட்ட விதிகளும், தண்டனைகளும் வலியுறுத்தப்பட்டன. அறநூல்களில் திருக்குறளும் மநு தருமசாஸ்திரமும் முக்கியமானவை. அறநூல் என்று கொண்டாடப்படுகிற திருக்குறள் விதிக்கிற அறங்களின் பின்னர் பொதிந்திருக்கிற கருத்தியலைக் கண்டறிய வேண்டியுள்ளது. அதேவேளையில் சநான தர்மத்தை முன்னிறுத்தி, பிறப்பின் அடிப்படையில் உயர்வு, தாழ்வு கற்பித்து, பால் அடிப்படையில் பெண்ணுடலை இழிவாகக் கற்பிக்கிற வைதிக சமயம், பார்ப்பனர்களைச் சமூக அடுக்கின் உச்சியில் வைத்திருக்கிற அரசியல், இன்றளவும் தொடர்ந்திட மநு தருமம் அடிப்படையாக இருக்கிறது. திருவள்ளுவர் மனிதர்களின் மேம்பாடு குறித்து அக்கறை கொள்ள, மநுவோ பிறப்பு அடிப்படையில் வருணாசி ரம சமூக மேலாதிக்கம் நிலவிட வழிவகுத்துள்ளார். இருவேறு அறங்களின் பின்புலத்தில் செயல்படுகிற அரசியல் அதிகாரத்தைக் கட்டுடைத்துக் கண்டறிந்திடும் முயற்சி, திருக்குறளும் மநு தருமசாஸ்திரமும் கட்டுரையின் அடிப்படையாகும்.*

***முக்கியச் சொற்கள்:*** *தமிழ் அறநூல், திருக்குறள், மநு தரும சாஸ்திரம், வைதிக சமயம், சாதிய ஒடுக்குமுறை, பால் சமத்துவமின்மை, ஆகம விதிகள், வைதிக சநாதனம், குற்றம், தண்டனை, வருணாசிரமம்*

சங்க காலத்திற்குப் பிந்தைய நூலான திருக்குறள், பண்டைத் தமிழர் நெறியான வாழ்க்கை வாழ்வதற்கான அறங்களைக் குறிப்பிடுகின்றது. இன்றைய சட்டம் போல திருவள்ளுவர் வரையறுக்கப்பட்ட இறுக்கமான விதிகளை வலியுறுத்தவில்லை. சராசரியான மனிதன் முயன்றால் பின்பற்ற முடிகின்ற ஒழுங்குகள்தான் குறள்களாக வெளிப்பட்டுள்ளன. மனித சமுதாயம் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் எனத் திருவள்ளுவர் தொகுத்துத் தந்துள்ள கருத்துகள், காலந்தோறும் தமிழர் வாழ்க்கையைச் செம்மையாக்கிட முயன்றுள்ளன. திருக்குறள், தமிழரின் சட்ட நூல் என்பதைவிட அறம் சார்ந்த கருத்துகளை மக்களிடம் பரப்பி, மனமாற்றத்தை ஏற்படுத்த முயன்ற நூல் என்பது தான் சரியானது. வைதிக சமய மரபிலான நெறிகளை வலியுறுத்தும் மநு தருமம், இறுக்கமான விதிகளைக் கொண்டுள்ளது. திருக்குறளும் மநு தருமமும், அடிப்படையில் எதிரெதிர் நோக்கங்களைக் கொண்டவை. திருக்குறள் தமிழ்ச் சமூகத்தினரின் நலன்களை முன்னிறுத்துகிறது. மநு தருமம், மக்களை வருண அடிப்படையில் பார்ப்பனர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என நான்கு பிரிவுகளாகப் பிரித்து, பார்ப்பனர்களின் நலன்களை மட்டும் வலியுறுத்துகிறது. இந்தியாவெங்கும் வைதிக சமயத்தின்

சமூக மேலாதிக்கத்தை வலுவாக நிறுவிட முயன்ற மநு தருமம், பருண்மையான சமய அடிப்படை அரசியல் பின்புலமுடையது. இந்தியா என்ற தொன்மத்தை உருவாக்கியதுடன், அதனை நிலை நிறுத்திடும் வழக்காறுகளை வடிவமைத்ததில் மநு தருமத்தின் பங்கு கணிசமானது. இந்திய அரசியலமைப்புச் சட்டம் வடிவமைக்கப்பட்டதில், மநு தருமம் நுண்ணிய பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக இந்து சமயம் குறித்தான ஆகமங்கள், சாஸ்திரங்கள் போன்றனவற்றை நடைமுறைப்படுத்திட மநு தருமம் குறிப்பிட்டுள்ள விதிகள், இன்றளவும் உச்ச நீதிமன்றத்தினால் வலியுறுத்தப்படுவது கவனத்திற்குரியது.

கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவில் தோற்றுவிக்கப்பட்ட வைதிக சமயமும் அவைதிக சமயங்களான ஜைனமும் பௌத்தமும் சங்க காலத்தில் தமிழக நிலப்பரப்பில் நுழைந்தன. வேட்டைச் சமூகமும் இனக்குழு வாழ்க்கையும் சிதலமடைந்து பெரு நிலப்பரப்பில் வேந்தனின் ஆட்சியதிகாரம் பரவலாகிக்கொண்டிருந்த சூழலில், இருவகை சமய மரபுகளும் தமிழகத்தில் செல்வாக்குப் பெற்றன. வேள்வித்தீயை வளர்த்து யாகம் செய்த சம்ஸ்கிருதம் பேசும் பார்ப்பனர்களுக்கு வேந்தர்களிடம் வரவேற்பு இருந்தது. புதிதாக உருவாகியிருந்த வணிகர்கள் ஜைன, பௌத்தத் துறவியரின் கருத்துகளை ஆர்வத்துடன் ஏற்றுக்கொண்டனர். ஏற்கனவே வழக்கினில் இருந்த புராதன சமயம் சார்ந்த நம்பிக்கைகள் மாற்றத்திற்குள்ளாகின. இத்தகு சூழலில். ஆட்சியதிகாரத்தினுக்குச் சார்பான நிலையில் விதிகள் உருவாக்கப்பட்டன; விலக்குகளும் உருவாக்கப்பட்டன. பொருளியல் வேறுபாடும் சமூக ஏற்றத்தாழ்வும் நிலவிய சமூகச் சூழலினை நியாயப்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்ட விதிகள், முழுக்க அரசியல் நோக்கமுடையன. எல்லாவிதமான விதிகளும் விலக்குகளும் நடைமுறைபடுத்தப்பட்ட சூழலில், அறம் என்ற கருத்தியல் தமிழகத்தில் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டது. அறம் என்பது மேன்மையாது, புனிதமானது, காலந்தோறும் தொடர்வது என்ற புனைவு, இன்றளவும் நிலவுகிறது.

திருக்குறள் அறம், பொருள், இன்பம் என மூன்று பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. திருவள்ளுவர், அன்றாட வாழ்க்கையில் மனிதர்கள் பின்பற்ற வேண்டிய செயல்பாடுகளைக் கருத்து வடிவில் தொகுத்துக் குறள்களாகத் தந்துள்ளார். ஜைனக் கருத்தியல் சார்புடைய திருவள்ளுவர், ஜைன சமயம் வலியுறுத்தும் கொல்லாமை, கள்ளுண்ணாமை, போன்ற கருத்துகளுக்கு முக்கியத்துவம் தந்துள்ளார். திருக்குறள் மனிதர்களுக்கிடையில் பிறப்பு, குடி, பால் அடிப்படையில் நிலவும் வேறுபாடுகளைக் கருத்தில் கொள்ளவில்லை. விதிகளை மீறினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடுமையான தண்டனைகள் என எதையும் வலியுறுத்தாத போக்கு, திருக்குறளின் தனித்துவம் ஆகும்.

பண்டைக்காலத்தில் வைதிக சமயத்தின் ஆதிக்கம் ஏற்படுவதற்கு வழி வகுக்கும் வகையில், பிறப்பு, பால் அடிப்படையில் மக்கள் பிரிக்கப்பட்டனர். இதனால் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வான சமூகத்தை நியாயப்படுத்துமாறு வர்ணம், ஆசிரம தருமங்கள் எழுதப்பபட்டன. இத்தகைய தருமங்களைத் தொகுத்தவர் மநு ஆவார். சமூக அடுக்கில் பார்ப்பனர்களின் உச்ச நிலையையும் ஆதிக்கத்தையும் பிற சமூகத்தினர் ஏற்றுக்கொள்வதற்கான பின்புலத்தினை மநு தொகுத்த மநு தரும சாஸ்திரம் உருவாக்கியது. இந்தியாவை ஆண்ட பெரும்பாலான மன்னர்கள் மநு தருமம் வகுத்த விதிகளின்படி அரசாண்டனர். பிறப்பின் அடிப்படையில் மேல்-கீழ், சுத்தம்- அசுத்தம் என விதிகளை வகுத்துத் தீண்டாமையைக் கற்பித்ததில் மநு தருமத்தின் பங்கு கணிசமானது. சாதிய உயர்வுதாழ்வு

இன்றுவரை இந்தியாவில் ஆதிக்கம் செலுத்துவதற்கு மநு தருமம் முக்கியமான காரணியாக விளங்குகிறது. ஒருவகையில் இந்திய அரசியலமைப்புச் சட்டம் போலவே மநு தருமம், போன நூற்றாண்டின் முற்பகுதியிலும் இந்தியாவில் ஆதிக்கம் செலுத்தி வந்தது.

மநு தரும சாஸ்திரமானது ஆசாரப் பகுதி, விவகாரப் பகுதி, பிராயச்சித்தப் பகுதி ஆகிய மூன்று பெரும் பகுதிகளைக் கொண்டது. மேலும் அது படைப்பும் அதன் பான்மையும், கல்வியும் கடமைகளும், இல்லறவியல், பொருளியலும் தனிமனித ஒழுங்கும், உணவு, சுத்தி மற்றும் மாதர், வானப்பிரஸ்தம், அரச நீதி, நீதி நெறியும் சட்டமும், ஆண் பெண்களின் அறம், கலப்பு ஜாதிகள்- ஆபத்து தருமம், குற்றங்களின் கழுவாய், வினைப்பயன் எனப் பன்னிரண்டு இயல்களாக விரிந்துள்ளது.

அறம் வெல்லும் மறம் வீழும் என்பது வெறுமனே நம்பிக்கை அடிப்படையிலானது. விதி என்பது விதிக்கப்பட்டது என்ற வைதிக சமயக் கருத்தியல் பிறப்பு, பால்ரீதியிலான பேதங்களை நியாயப்படுத்துகின்றது. விதியின் விளையாட்டு, விதியின் கைப்பாவை, விதியை வெல்ல முடியுமா? தலைவிதியை மாற்ற முடியுமா? போன்ற சொல்லாடல்கள் மூலம் வைதிக சமயம் நிலவும் சமூகச் சூழல் குறித்து விமர்சனமற்ற பார்வையை வலியுறுத்துகின்றது. தலைவிதித் தத்துவம் இன்றளவும் செல்வாக்குப் பெற்றிருப்பது கவனத்திற்குரியது. அதிகாரத்துடன் ஆள்கின்றவர்களின் நலனைக் காக்கும் செயலை, அறம் என்ற பெயரில் விதிகள் காலந்தோறும் கட்டிக் காத்து வருகின்றன. அறம் என்பது ஆளப்படுகின்றவர்களுக்குச் சார்பான நிலையில் நீதி என்ற பெயரில் சட்டங்கள் இயற்றப்படுகின்றன.

இயற்கையையும் மனிதர்களையும் மேலாதிக்கம் செய்ய முயன்றதன் விளைவாக மனித நாகரிகம் உருவானது. அதாவது சூழலின்மீது ஆளுகை செலுத்துவதுடன் தனது உடலையையும் கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வந்தபோது உடைமைப் பண்பாடு தோன்றியது. போர், வேளாண்மை, வணிகம், தொழில், கல்வி மூலம் பல்வேறு சமூகச் செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள், பிறரின் உடலுழைப்பினைச் சுரண்டியதுடன், புலன்களை ஒழுங்கு படுத்தினர். மனித இருப்பினுக்கு ஆதாரமான புலன்களையும் அவற்றினால் கிடைக்கும் இன்பங்களையும் இழிந்தவை என்ற பேச்சினை உருவாக்குவதுடன், மறுபிறப்பு, விண்ணில் இருக்கும் சொர்க்கம் பற்றிய புனைவுகளை ஏற்படுத்தியதில் வைதிக சமயம் முன்னிலை வகிக்கிறது. புலன்களை ஒடுக்குதல் என்பது ஒருவகையில் வதையே. இத்தகைய வதைகள்தான் ஒருவகையில் அறங்கள் உருவாவதற்கான அடிப்படை. மனிதனுடைய ஐம்பொறிகளும் புலன்களின் வழியாக அடைகின்ற நுகர்வுகள், இன்பங்களுக்காகப் படைக்கப்பட்டவை. ஆனால் சமூக மனிதன்மீது, அவன் சார்ந்து வாழும் சமுதாயம், ஒழுங்கு என்ற பெயரில் திணிக்கும் நெருக்கடிகள் அளவற்றவை. திருக்குறள் வலியுறுத்தும் புலனடக்கம் பற்றிய அறம் குறிப்பிடத்தக்கது.

**ஒருமையுள் ஆமைபோல ஐந்தடக்கல் ஆற்றின்**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து (குறள்:126)**

ஒரு பிறவியில் ஒருவன் தனது ஐம்புலன்களையும் அடக்கியொடுக்கினால் எழு பிறப்புகளிலும் நன்மை கிடைக்கும் என்ற திருக்குறள் வரிகள், ஐந்து புலன்களையும் அடக்குவதனால் ஏற்படும் விளைவைக் குறிப்பிடுகின்றன.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் பழங்குடிச் சமூகத்தில் கள் என்பது உணவு. வீட்டிற்கு வருகின்ற விருந்தினர்களை உபசரிக்கக் கள் தருவது இயல்பானது. கள் குடித்த சங்கப் பெண்கள், சிவந்த

கண்களுடன் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர். ஒருவருக்கொருவர் அன்பினையும் நெருக்கத்தினையும் வெளிப்படுத்த கள் குடித்தல் பயன்பட்டது. சங்க இலக்கியம் சித்திரிக்கும் வேட்டை, வீரம், இறைச்சி உண்ணுதல். மது குடித்தல், காதல் கொண்டாட்டம் என்ற நிலையானது, இனக்குழு வாழ்க்கை சார்ந்தது. புலன்களின் மூலம் இன்பங்களைத் துய்ப்பது இயல்பானதாகக் கருதப்பட்டது. இத்தகு சூழலில் திருவள்ளுவர் கள்ளுண்ணாமை அதிகாரத்தில் குறிப்பிடுகின்ற கருத்துகள், புதிய போக்கினை அறிமுகப்படுத்தின.

**துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்**
**நஞ்சுண்பார் கள்உண் பவர் (குறள்:926)**

போதையைத் தரும் கள்ளினை அருந்துவதனால் உடல், மனநீதியில் வரும் கேடுகள் குறித்துக் கடுமையான விமர்சனம் திருவள்ளுவருக்கு இருந்தது. எனவேதான் கள் குடித்துப் போதையில் இருப்பவரைச் செத்தவருக்கு ஒப்பீடு செய்துள்ளார். மநு தருமம், இரு பிறப்பாளர்கள் மது அருந்துவது கூடாது என விதி வகுத்துள்ளது. அதேவேளையில் சூத்திரர்கள் மது குடித்தல் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. அரிசியிலிருந்து வடிக்கும் சாராயமானது சோற்றின் மலமாகும். அதற்குப் பாவம் என்று பெயராதலால் மூவர்ணத்தாரும் அதைக் குடிக்கலாகாது (மநு.இ.11:93) திருவள்ளுவர் கள் குடித்தல் தவறு என எல்லோருக்கும் பொதுவாகக் குறிப்பிட, மநுவோ விளிம்பு நிலையினரான சூத்திரர் மது குடித்தல் பற்றி எதுவும் குறிப்பிடாததது நுண்ணரசியலாகும்.

சொக்கட்டான் உள்ளிட்ட சூதாட்டமாடக் கூடாது என மநு குறிக்கின்றார். திருவள்ளுவர் சூதின் கேடு குறித்துப் பத்துக் குறள்கள் எழுதியுள்ளார்.

**சிறுமை பல செய்து சீரழிக்கும் சூதின்**
**வறுமை தருவதுஒன்று இல் (குறள்:934)**

மனிதர்களுக்குச் சிறுமையுடன் வறுமையையும் ஏற்படுத்துகின்ற சூது என்ற திருவள்ளுவரின் கருத்து, இன்றைக்கும் ஏற்புடையது.

சமூகத்தில் பெண்களின் நிலை, மதிப்பீடு குறித்த கருத்துகள், அறம் அல்லது நீதியைப் போதிக்கின்ற நூல்களில் முக்கிய இடம் பெறுகின்றன. பால் அடிப்படையில் பெண்ணை இரண்டாம் தரத்தினவளாகக் கருதுகின்ற பொதுப்புத்தியைப் பொதுவாக நீதி இலக்கியம் நகலெடுக்கிறது. பெண் எப்பொழுதும் ஆணின் கண்காணிப்பிற்குள் இருக்கப்பட வேண்டியவள் என்ற பார்வை வலியுறுத்தப்படுகிறது.

மநு தருமம் பெண்களின் தனிப்பட்ட அடையாளத்தையும் சுயமான செயல்பாடுகளையும் ஏற்கவில்லை. “பெண் இளமையில் தந்தையாலும் பருவகாலத்தில் கணவனாலும் முதுமையில் மகனாலும் காக்கப்பட வேண்டியவர். ஆதலால் பெண் எப்பொழுதும் தன்னிச்சையாக இருக்கக் கூடாதவர் (இ.9:3). பெண், தனித்து இயங்கும் திறன் அற்றவள் என்ற நிலையில் எப்பொழுதும் ஆணைச் சார்ந்திருக்க வேண்டும் என வலியுறுத்துவது, பால் அடிப்படையில் ஒடுக்குவதாகும்

பெண்களை ஒழுக்கக் கேடானவர்களாகவும் மயக்கும் குணம் கொண்டவர்களாகவும் மநு தருமம் சித்தரிக்கிறது. பாலியல் ரீதியில் ஒழுக்கக்கேடு நடந்தால் அதில் ஆணுக்குப் பொறுப்பு எதுவுமில்லை என்பது போல விவரிக்கும் மநு தருமம் பெண்களை இழிவுபடுத்துகிறது.

தங்கள் அலங்காரத்தால் மனிதரைக் கவரும் தன்மை பெண்களின் இயல்பாகையால் அறிந்தோர் பெண்களிடம் கவனக்குறைவாக நடந்துகொள்ள மாட்டார்கள். ( மநு. இ.: 2:213).

எந்தப் பருவத்தினளாயினும் தனது இல்லறத்திலேகூட எந்தப் பெண்ணும்

தன்னிச்சையின்படி எச்செயலும் செய்யக் கூடாது (மநு. இ.5:147)

புலன்களை அடக்கியவனாயினும் அறிவிலியாயினும் அவர்களைத் தங்களது தொடர்பால் காமக்குரோதமுள்ளவனாகச் செய்வர் பெண்கள்.( மநு.இ.2:214).

பெரும்பாலும் பெண்கள் கற்பிலார் என்றே பெரிதும் பல நூல்களிலும் கூறப் பட்டிருக்கிறது.(மநு. இ.9:19)

பெண்கள் கற்பிலாதவர்கள் என்பதும் அப்பாவியான ஆண்களை மயக்கிக் காமத்தில் சிக்க வைக்கும் இயல்புடையவர்கள் என்ற மநுவின் கூற்று, வக்கிரமானது. பெண்களை மனித உயிராகக்கூட மதிக்காத மநு தர்மம், கணவன் -மனைவி ஆகிய இருவருக்கும் இடையில் நிலவ வேண்டிய உறவு பற்றிப் பெண்களுக்கு மட்டும் அறிவுரை வழங்குகிறது

கணவன் சூதாடுகிறவனாயினும் குடிகாரனாக இருந்தாலும் நோயாளியாயினும் மனைவி அவனுக்குச் செருக்குற்றுப் பணி புரியாமலிருந்தால் அவளுக்கு அழகு செய்தல், ஆடை, படுக்கை இவற்றை மறுத்து மூன்று மாதம் விலக்கி வைக்கவும்.(மநு.இ.9:78)

இழிநடத்தை, பரத்தையர் தொடர்பு, நற்குணமின்மை இவற்றையுடையவனாயினும் கற்புடைய பெண் தன் கணவனைத் தெய்வமாகப் பேணுக.(மநு. இ.5:154)

கற்புடைய பெண், கணவன் சீரழிந்த பொறுக்கியாக இருந்தாலும், அவனைத் தெய்வமாகப் போற்ற வேண்டும் என்ற மநுவின் அறிவுரை, பெண் பற்றிய அன்றைய சமூக மதிப்பீட்டின் வெளிப்பாடாகும்

நான்கு வருணப் பாகுபாடுகள் சமூகத்தில் நிலவ வேண்டியது அவசியம் என வலியுறுத்தும் மநு, பார்ப்பனர் சமூக அடுக்கினில் பெறுகின்ற உயர்ந்த இடத்தை உறுதி செய்வதற்குப் பெண்களின் யோனித் தூய்மையை முனிறுத்துகின்றார். வருணக் கலப்பு ஏற்பட்டு, சாதியின் தனித்துவம் சிதலமானால், வருணாசிரமம் இல்லாமல் போய்விடும் எனக் கருதுகின்ற மநு, பெண்கள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற ஒழுக்க விதிகளை வகுத்துள்ளார். பெண்களை நம்ப முடியாமல் தவிக்கின்ற ஆணின் தவிப்பு, மநுவின் குரலாக வெளிப்பட்டுள்ளது. வேறு வருணத்துப் பெண்ணுடன் உடலுறவு கொள்கின்றவருக்கு மநு விதித்துள்ள தண்டனைகள் நிலவும் அமைப்பினைக் காப்பதற்கான வழிமுறைகள் ஆகும். "பிறன்மனை விரும்புவோரை, அவர்கட்கு அச்சம் உண்டு பண்ணும் பொருட்டு உதடு, மூக்கு, முதலிய கொய்து அடையாளம் செய்து, அரசன் ஊரைவிட்டு விரட்டுக (மநு.இ.7:351) குடும்பத்தைப் பாதுகாப்பது போல மநுவின் வாசகம் தோன்றினாலும், பெண்ணை மையமிட்ட வருணாசிரம் தொடர்ந்து நிலவுவதற்கான பின்புலத்தை மநு தண்டனைகள் மூலம் நிறுவுகின்றார்.

திருவள்ளுவர் ஒப்பீட்டளவில் பெண்ணுக்கு முக்கியத்துவம் தந்தாலும், அவருடைய பார்வை ஆண் மையமிட்டதாகவே உள்ளது. பெண் வழிச் சேரல் அதிகாரத்தில் திருவள்ளுவர் விவரிக்கும் பெண் பற்றிய கருத்துகள் விமர்சனத்திற்குரியன. பெண்ணுக்குப் பணிந்து நடத்தல், பெண்ணின் பேச்சைக் கேட்டுச் செயல்படுதல், பெண்ணின் விருப்பத்தை நிறைவேற்றுதல் போன்றவற்றைச் செய்கின்ற ஆண்களின் செயல்களைத் திருவள்ளுவர் கண்டனம் செய்கின்றார்.

**அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்**
**பெண்ணேவல் செய்வார்கண் இல் (குறள்:909)**

பெண்ணுடன் தனது கருத்துகளைப் பகிர்கின்ற ஆண், அறச்செயல்களைச் செய்ய

முடியாது: அவனுடைய பிறவிக்கு நன்மை இல்லமல் போகும் என்ற வள்ளுவரின் வாதத்தில் பெண்ணின் அறிவையும் ஆற்றலையும் மறுக்கின்ற போக்கு உள்ளது.

பிறன்மனை நயத்தல் கூடாது என வலியுறுத்துகின்ற குறள்கள், தனிமனித ஒழுக்கம் என்ற நிலையில் ஆண் மேலாதிக்கத் தன்மையுடன் அமைந்துள்ளன.

**பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு**
**அறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு (குறள்:148)**

பெண்ணுடலைப் பிற ஆண்களிடமிருந்து காத்து, புனிதமான உடலாக மாற்றி, எப்பொழுதும் கணவனின் அதிகாரத்திற்கு உட்பட்டிருக்குமாறு பெண் மனதை மாற்றிடும் நுட்பமான பணியைக் கற்பு என்ற சொல் மூலம் திருவள்ளுவர் செய்துள்ளார். பெண்ணுக்குக் காவல் என்பதனால் பயன் இல்லை என்ற விஷயத்தில் வள்ளுவரும் மநுவும் ஒத்த கருத்துடையவர்கள்.

கல்வி என்பது இரு பிறப்பாளராகக் கருதப்படுகின்ற பிறப்பினால் உயர் சாதியில் பிறந்தவர்களுக்கு மட்டும்தான் உரித்தானது என்று மநு தருமம் நுட்பமாக வலியுறுத்துகின்றது. வர்ணத்தால் தாழ்த்தப்பட் டவர்கள், பெண்கள் போன்றோரின் கல்வி குறித்து, மநுவிற்கு அக்கறை இல்லை. பார்ப்பனர் குலத்தைச் சார்ந்த இளைஞர்களின் குருகுலக் கல்வி குறித்து மநு விரிவாக விளக்கியுள்ளார். கல்வியைப் பிறப்பு, பால் அடிப்படையில் அளித்திடுவதற்கு விதிகள் செய்த மநுவிற்கு முற்றிலும் மாறான நிலையினைத் திருவள்ளுவர் பின்பற்றுகின்றார்.

**மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்**
**கற்றார் அனைத்துஇலர் பாடு (குறள்:409)**

பிறப்பின் அடிப்படையை மறுத்து எல்லோருக்கும் கல்வியை வழங்கிட விழைகின்ற திருவள்ளுவர், கல்லாதவர் முகத்தில் இருப்பவை கண்கள் அல்ல புண்கள் எனவும், கேட்டலின் சிறப்பினை அறியாதவர் இருந்தால் என்ன செத்தால் என்ன எனவும் கோபப்படுகின்றார். மனிதன் கல்வியினால் மட்டும் முழுமை அடைவான் என்ற நோக்கத்துடன் கல்வியின் சிறப்பினைக் குறிப்பிட்டுள்ள வள்ளுவர், சநாதன தருமத்திற்கு எதிரானவராக விளங்குகிறார்.

யார் சொன்னாலும் அவருடைய பேச்சில் உண்மையான பொருளைக் கண்டறிதல் அறிவு என இலக்கணம் வகுத்துள்ள திருவள்ளுவர், பிறப்பு அடிப்படையிலான பேதங்களை மறுக்கின்றார். தெய்வத்தால் ஆகாத செயல் என்றாலும், முயற்சியினால் அடைய முடியுமென்ற குறளின் கருத்து, மனிதமையத் தன்மையுடையது. மநு தருமம் அப்பாலைத் தத்துவத்திற்கு முக்கியத்துவம் தரும்வகையில், வேதங்களை முன்னிறுத்துகின்றது, மநுவால் கட்டளையிடப்பட்ட நீதிகள் அனைத்தும் வேதத்தில் விதிக்கப்பட்டவையே. ஏனெனில் அவர் வேதங்களை நன்றாய் உணர்ந்த பிரம்ம ஞானி (மநு.இ.2:.7). மேலும் மநுவின் கருத்துப்படி உலகம் தண்டனைக்குப் பயந்து செயல்படுகிறது. தண்டனை உண்டென்றால் மட்டுமே உலகோர் நெறியில் நிற்பர். இயல்பிலே அவ்விதம் நடக்க மாட்டார். தண்டனைக்கு அஞ்சியே உலகம் இயங்குகிறது. (இ.7:22). திருவள்ளுவர் மனித முயற்சியை முன்னிலைப்படுத்த, மநுவோ தண்டனையை முதன்மைப்படுத்துகின்றார்.

திருவள்ளுவரின் அரசு பற்றிய கருத்துகள் இன்றைய மேலாண்மையியலுடன் ஒத்துப் போகின்றன. அரசுக்கும் குடிமக்களுக்கும் இடையிலான உறவினைப் பற்றிய கருத்துகள் முக்கியமானவை.

**இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**
**வகுத்தலும் வல்லது அரசு (குறள்:385)**

அரசு என்பது இயற்றல், ஈட்டல், காத்தல் ஆகிய மூன்று நிலைகளில் இயங்கிட வேண்டுமென்ற வள்ளுவரின் கருத்துகள், ஆள்கின்றவர்களுக்குச் சார்பானவை. மநு விவரிக்கின்ற அரசன், காலையில் எழுந்தது முதலாகப் பார்ப்பனர்களுடன் கலந்து ஆலோசித்து, வருணாசிரம தருமத்தை நிலை நிறுத்துகின்றவன். “போரில் புறங்கொடாமை, குடிகளை நேர்மையாகப் புரத்தல், பார்ப்பனர்களைப் பேணல் இம்மூன்றும் அரசனுக்கு மேலான நலன் தரும் (மநு.இ.7:88)” எளிய அரசனாலும் வேதம் உணர்ந்த பார்ப்பனரிடம் தீர்வை வாங்கக் கூடாது. அவன் தன் நாட்டில் பசித்திருக்கவும் பார்த்திருக்கவும் கூடாது. (மநு.இ.7:133)”. குடிமக்களின் நலன்களைப் போற்றுகின்ற மன்னரைப் பற்றிய வள்ளுவரின் கூற்றுக்கு மாறான நிலையில், மநுவின் மன்னன், பார்ப்பனர்கள் வளமான வாழ்க்கை வாழ்ந்திடுவதற்கான செய்ல்களைச் செய்கிறவன் ஆவான்.

உழவுத் தொழில் குறித்து வள்ளுவருக்கு மேன்மையான கருத்துகள் இருந்தததினால் தான், உழவு எனத் தனியாக அதிகாரம் இயற்றியுள்ளார். மக்களின் வாழ்க்கைக்கு அடிப்படையான தேவையை நிறைவு செய்கின்ற உழவு பற்றிய குறளின் விவரணை இன்றைக்கும் பொருந்தும். தீயை வளர்த்து, மந்திரம் ஓதி, வளர்க்கப்படும் யாகத்தின் மூலம் பொருள் ஈட்டுகின்ற சொகுசான வாழ்க்கை வாழ்கின்ற பார்ப்பனர்களின் செயலை உன்னதமாகப் போற்றுகின்ற மநு தருமம், உழவைப் பொறுத்தவரையில் திருக்குறளுக்கு முற்றிலும் எதிரானது. பயிரிடுதலை மேலான தொழில் என்று சிலர் கருதுகின்றனர். ஆயினும் பெரியோர் அதைப் பாராட்டவில்லை(மநு.இ.10:84). உழவின் சிறப்பினை

**உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற்று எல்லாம்**
**தொழுதுண்டு பின்செல் பவர் (குறள்:1033)**

என விவரிக்கும் குறள், வயலில் இறங்கிச் சேற்றிலும் நீரிலும் உழைக்கின்ற மக்களின் சிறப்பினைப் பதிவாக்கியுள்ளது.

உணவிற்காக உயிரினங்களைக் கொல்வது கூடாது என்பதை அழுத்தமாகத் திருவள்ளுவர் குறள்களாக்கியுள்ளார்.

**அறவினை யாதெனின் கொல்லாமை கோறல்**
**பிறவினை எல்லாம் தரும் (குறள்:321)**

உணவுப் பழக்கவழக்கம் என்பது மக்கள் கூட்டத்திற்கேற்ப மாறும் இயல்புடையது. விலங்கு, மீன் போன்றவற்றைக் கொல்லுவது கூடாது என்ற ஜைன சமயக் கருத்தானது, திருவள்ளுவருக்கு உடன்பாடானது. எனவேதான் அவர் உயிரினங்களைக் கொல்லாமையை அறம் என்கிறார்.

மநு விலங்குகள், மீன்கள் போன்றவற்றை உணவுக்காக உண்ணலாம் என்கிறார். “முள்ளம் பன்றி, சல்ய மிருகம், உடும்பு, காண்டா மிருகம், ஆமை, முயல், இவை ஐந்து நகங்களுடையனவேனும், இவற்றையும் ஒட்டகம் தவிர்த்த ஒற்றைப் பல்லுள்ள மிருகங்களையும் உண்ணலாம்” (மநு.இ.5:18).

யாகத் தீயினில் பலியிடப்படுவதற்காக உயிரினஙகளைக் கொன்று, பின்னர் உண்ணுதல் என்பது மநுவினால் ஏற்றுக் கொள்ளப்படதாகும். அதிலும் யாகத்தில் பலியிடப்பட்ட பசுவின் இறைச்சியை உண்ணலாம் என்கிறார் மநு. “வேதவிதிப்படி இல்லாமல், மந்திரபூர்வமாகக் கொல்லப்படாத பசுவை ஒருபோதும் உண்ணலாகாது” (மநு.இ.5:36)

திருவள்ளுவர், யாகத்தீயினில் பலியிடப்படும் விலங்கின் இறைச்சியை உண்ணாதிருத்தல் நன்று எனக் குறிப்பிட்டுள்ளார்.

**அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்**
**உயிர்செகுத்து உண்ணாமை நன்று (குறள்:259)**

திருவள்ளுவர் உயிர்களைக் கொல்லக் கூடாது என்பதில் ஆழ்ந்த நம்பிக்கை மிக்கவர். மநுவோ மந்திரம் சொல்லி, வேள்வித்தீயில் பலியிடப்பட்ட பசுவையும் ஊண்ணலாம் என்கிறார்.

இந்திய சமூகத்தில் பிறப்பினால் பார்ப்பனராகப் பிறந்தவரின் இடம், முக்கியத்துவம் குறித்த மநுவின் கருத்துகள், வருணாசிரம ஏற்றத்தாழ்வுகளை நியாயப் படுத்துகின்றன. அவை:

ஓதுவிப்பதாலும் வேள்வி செய்வதாலும், தானம் பெறுவதாலும் பார்ப்பனர் தங்கள் வாழ்க்கையை நடத்திக்கொள்ள வேண்டியது (மநு.இ.10:75)

அகந்தையினால் பார்ப்பனனை, "இதைச் செய்", என்று கட்டளையிடும் சூத்திரன் வாயிலும் காதிலும் காய்ச்சிய எண்ணெயை ஊற்றுக (மநு. இ.8:.272)

பார்ப்பனனுடன் அவனுக்குரிய உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்த சூத்திரனை அவனது இடுப்பில் சூடு போட்டோ உட்கார்ந்த ஆசன உறுப்பில் சிறிது அறுத்தாவது ஊரை விட்டுத் துரத்த வேண்டியது (மநு. இ.8:281).

எந்தப் பாவம் செய்தபோதிலும் பார்ப்பனனைக் கொல்லாமல் காயமின்றி, அவன் பொருள்களுடன் ஊரை விட்டுத் துரத்துக. (ம.நுஇ.8:.380).

பார்ப்பனன் ஏவலுக்கென்றே உள்ள சூத்திரனிடம் கூலி கொடுத்தோ, கொடுக்காமலோ வேலை வாங்கலாம் (மநு.இ8:413).

பார்ப்பனர்கள் தீச்செயலில் ஈடுபட்டவராயினும் நற்கருமங்கள் அனைத்திலும் போறுதலுக்குரியவர்கள். (மநு.இ. 9:.319). இவைபோல, பார்ப்பனர்களின் சிறப்புகளைச் சொல்கின்ற நூற்றுக்கணக்கான சுலோகங்கள் மநு தருமத்தில் இடம் பெற்றுள்ளன. "ஆயிரக்கணக்கான அநீதியானதும், ஒரு சாராருக்கு நன்மையும், மறுசாரருக்குக் கொடுமையும் செய்வதுமான விதிகள் மனுதர்மத்தில்நிறைந்திருக்கின்றன. சுருங்கச் சொல்லுங்கால்"பிராமணன்" என்றவகுப்பாரைத்தவிர, வேறு எந்த வகுப்பாருக்கும் அதில் யாதொரு நன்மையும் இல்லை என்றே கூறலாம். ஆகையால் தோழர்களே! இந்நூலை "மநு தர்மம்" என்று கூறுவதா? அல்லது "மநு அதர்மம்" என்று கூறுவதா? சற்று யோசித்து முடிவு செய்யுங்கள்." என்ற பெரியாரின் கூற்று, மநு தருமத்தைக் கடுமையாக விமர்சிக்கிறது. (குடி அரசு நாளிதழ்,10-03-1935)

திருக்குறள், சமூகமாகக் கூடி வாழ்கின்ற மனிதர்களுக்கிடையில் தோன்றுகின்ற முரண்களைச் சீராக்கிடவும், செம்மையான வாழ்க்கை வாழ்வதற்கான பின்புலத்தையும் முன்னிறுத்தியுள்ளது. திருவள்ளுவர் நீதி, சட்டம், தண்டனை என விதிகளைவிட, தனிமனித மனதில் ஏற்படுகின்ற மாற்றங்களை வலியுறுத்துகின்றார். இன்றைய நவீன வாழ்க்கைக்குத் தேவையான கருத்துகள், திருக்குறளில் இருப்பது அந்நூலின் தனிச்சிறப்பு. வருணாசிரம தருமத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட சமூகம், செம்மையாகச் செயல்படுவதற்காக உருவாக்கப்பட்ட நீதி, சட்டங்கள், தண்டனைகள் பற்றிய கண்ணோட்டத்தை மநு தருமம் அழுத்தமாக வலியுறுத்துகின்றது. திருவள்ளுவர், ஒட்டு மொத்த மனிதர்களின் மேம்பாடு குறித்து அக்கறைகொள்ள, மநுவோ பிறப்பு அடிப்படையிலான வருணாசிரம சமூக மேலாதிக்கம் தொடர்ந்து நிலவிட வழி வகுத்துள்ளார்.

## துணைநூல் பட்டியல்

1. புலியூர்க் கேசிகன் (ப-ஆ). (2014). *திருக்குறள்: பரிமேலழகர் உரை.* சென்னை, பூம்புகார் பி□சு□ம்.

2. திருலோகசீதாராம் (மொ-பெ). (1999). *மநுதர்ம சாஸ்திரம்.* ஏ.கே. கோபாலன், சென்னை.

3. முருகரத்தனம், தி. (2004). *வருணாசிரம தர்மமும் வாய்மொழி வள்ளுவமும்,* மதுரை, தமிழ்ச் சோலை.

4. ராமானுஜதாத்தாச்சாரியர். (2006). இந்து மதம் எங்கே போகிறது? சென்னை, நக்கீரன் பதிப்பகம்.

5. ராஜ்கௌதமன். (2008). தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும், கோயம்புத்தூர், விடியல் பதிப்பகம்.

6. Subramanian, N. (1989). *The Bramins in the Tamil Country*, Madurai, Ennes Publications.